**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 22.10.2025**
**OS. No. 89/2020**
**வழக்கு சாட்சி PW.2–தேவராஜ் , த/பெ.சொக்கலிங்கம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

8) வா.சா.ஆ.10 கிரைய ஆவணத்தில் நீரோடை பள்ளத்திற்கு கிழக்கு என்று சக்குபந்தி குறிப்பிட்டு தான் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நீரோடை பள்ளத்திற்கு பக்கத்தில் தான் நான் விற்பனை செய்த நிலம் உள்ளது என்றால் சரிதான். நான் விற்பனை செய்த இடத்திற்கு பக்கத்தில் தான் 1, 2 பிரதிவாதிகளின் நிலம் உள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுடைய நிலம் பட்டா நிலம் என்றால் எனக்கு தெரியவில்லை. 1, 2 பிரதிவாதிகளின் நிலம் புறம்போக்கு நிலம் என்பதால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், என்னுடைய நிலமானது நீரோடை புறம்போக்கு நிலம் என்பதால் தான் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

9) என்னுடைய நிலத்திற்கு மேற்குபுறமாக உள்ள வீட்டிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விற்பனை செய்த நிலத்திற்கு உஷேன் என்பவரின் பெயரில் தான் வரி விதிக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது வரை அதை வாதி மாற்றவில்லை என்றால் சரிதான், நகராட்சியில் கேட்டபோது பெயர் மாற்றம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். தற்போது வரை நகராட்சியில் வரிக்கு பெயர் மாற்றம் செய்யப்படவில்லையா என்றால் ஆமாம். வாதி தன் பெயரில் தற்போது வரி பெற்றிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் விற்பனை செய்த நிலத்தில் வாதி கூடுதலாக 5 அடி சேர்த்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அதேபோல் 1, 2 பிரதிவாதிகளின் இடத்திலும் வாதி 3 அடி கூடுதலாக வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் வாதி சொல்லி தயார் செய்யப்பட்டது, நான் படித்து பார்த்து அதில் கையொப்பம் செய்தேன், தற்போது அதிலுள்ள விவரங்கள் சில மறந்துவிட்டது.

என் நிரூபண வாக்குமூலத்தில் 1, 2 பிரவாதிகள் 3ம் பிரதிவாதியிடம் ஒரு பொய்யான புகார் அளித்து அது சம்மந்தமாக வாதியை மிரட்டி வருவதாக சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வாதி சொல்லி எனக்கு தெரியும், நானும் ஒருமுறை அவர்களுக்குள் பிரச்சனை நடந்தபோது நேரில் பார்த்தேன். புகார் அளித்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

10) 1, 2 பிரதிவாதிகள் புகார் கொடுப்பது தொடர்பாகவும், பிரச்சனை செய்வது தொடர்பாகவும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 1, 2 பிரதிவாதிகள் என்னிடம் ஏதேனும் பிரச்சனை செய்தார்களா என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் குறைந்தவிலைக்கு என்னிடம் நிலம் கேட்டார்களா என்றால் ஆமாம், நான் தர மறுத்தவிட்டேன். அதன் பிறகு என்னிடம் ஏதேனும் பிரச்சனை செய்தார்களா என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகளுக்கும், வாதிக்கும் இடையே பிரச்சனை நடந்த விவரத்தை நான் ஒரு முறை தான் பார்த்தேனா என்றால் ஆமாம், அந்த சமயம் 1, 2 பிரதிவாதிகள் தான் வாதியிடன் பிரச்சனை செய்தார்கள். நான் சொல்வது தவறு என்றும், வாதி தான் 1, 2 பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்தார் என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீரோடை நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியதால் மழைக்காலங்களில் தெரு முழுவதும நீர் தேங்கி நிற்கிறது என்றும், இதை 1, 2 பிரதிவாதிகள் கேட்டதால் அவர்கள் மீது இந்த வழக்கை வாதி பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு விற்பனை செய்த நிலமானது 20 வருடங்களுக்கு முன்பு அங்குள்ளவர்கள் குப்பை கொட்டுவதற்காக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.